[2007 ஏப்ரல் 10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொகுதி வரையறை என்பது தேர்தல் ஆணையத்தினுடைய பொறுப்பில், அதற்காக அமைக்கப்பட்ட நடுவர் மன்றம் போன்ற ஓர் அமைப்பு, அதை நிறைவேற்றுகிறது. அந்தத் தொகுதி அமைப்புகளைப் பற்றி பொது மக்கள் தங்களுடைய கருத்துகளைத் தெரிவிப்பதற்கு அண்மையிலே ஓர் அறிவிப்பு வெளியிட்டிருக்கிறார்கள். அந்த அமைப்பு சார்பாக, பொது மக்களுடைய கருத்தை அவர்கள் அறிவார்கள். அதிலே சட்டமன்ற உறுப்பினரோ, நாடாளுமன்ற உறுப்பினரோ, பொது மக்களுடைய பிரதிநிதிகளோ, பஞ்சாயத்துத் தலைவரோ, யாராக இருந்தாலும் தங்கள் கருத்தைத் தெரிவிக்கலாம். ஆனால், தொகுதிகள் அமைக்கப்படுகிறபோதே, அதற்கென்று ஒரு அடிப்படை இலக்கணம், வடக்குத் திசையிலேயிருந்துதான் ஒரு மாவட்டத்திற்குள் தொகுதிகளைப் பிரித்துக்கொண்டு செல்ல வேண்டும். தொகுதிகளில் ஒவ்வொரு ஒன்றியமும் கூடுமானவரையில் முழு அளவில் மொத்தமாக இடம் பெற வேண்டும். இப்படி அதற்குமேல் மக்கள் தொகை அடிப்படையிலேயும், வாக்காளர் அடிப்படையிலேயும் ஏறத்தாழ ஒரே அளவாக, சமச்சீராக அமைய வேண்டும். இவையெல்லாம் சட்டமன்ற உறுப்பினர்கள் வரவேற்கக்கூடிய கொள்கைகள். அவற்றை நிறைவேற்றுகிறபோது ஏதேனும் குறைபாடு இருக்குமானால், பொது மக்கள் சார்பாகத் தெரிவிக்கப்படுகிற அந்த ஆலோசனைகளைச் சட்டமன்ற உறுப்பினரும் அந்தக் குழுவிற்குத் தெரிவிக்கலாம். அது ஏடுகளிலே வெளியிடப்பட்டிருக்கிறது.

முற்பகல் 9-35

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 32, மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. ரங்கநாதன், மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

32—

துணை மின் நிலையம்

***334—திரு. ப. ரங்கநாதன்:**

மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2007 ஏப்ரல் 10]

(அ) தகவல் தொழில்நுட்ப நிறுவனங்கள் அமைந்துள்ள சிறுசேரிப் பகுதியில் புதிய துணை மின் நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) ஆம். தகவல் தொழில்நுட்ப நிறுவனங்கள் அதிகம் அமைந்துள்ள சிறுசேரிப் பகுதியில் ஒரு 230/110 கி.வோ. துணை மின் நிலையம் அமைக்க ரூ.43.47 கோடி மதிப்பீட்டில் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. சிப்காட் இடம் தேர்வு செய்யப்பட்டு, 2004-2005 திட்டக் காலத்தில் சேர்க்கப்பட்டு, பணிகள் நடைபெற்று வருகின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. ரங்கநாதன்.

திரு. ப. ரங்கநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அலமாதியில் கடந்த 2, 3 மாதங்களுக்கு முன்பு, 400 மெகாவாட் திறன்கொண்ட மின் பகிர்வு நிலையத்தை அங்கே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் துவக்கி வைத்தார்கள். அதேபோன்று, இந்த சிறுசேரிப் பகுதியையும் சேர்த்துப் பல்வேறு புதிய தொழில் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கழகத் தலைவர் கலைஞருடைய ஆட்சியிலே கடந்த 10, 11 மாதங்களில் வந்திருக்கின்றன. இவற்றையெல்லாம் கவனத்திலே கொண்டு, நமது மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களுக்கு 230/110 கி.வோ. நிலையத்திற்குப் பதிலாக, 400 மெகாவாட் திறன்கொண்ட மின் நிலையம் அமைக்க உத்தேசம் உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடுகின்ற இந்த

சிறுசேரிப் பகுதியில் இன்றையதினம் தொழில்நுட்ப நிறுவனங்கள் ஏராளமாக வந்துகொண்டிருப்பதை மனதிலேகொண்டு, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே கடந்த மாதம் அந்தச் சாலை முழுவதும் சுற்றிப் பார்த்து, இன்னும் என்னென்ன வசதிகள் செய்து தர வேண்டும் என்பதை அதிகாரிகளோடு ஆய்வு செய்து, அந்தப் பகுதியின் தொழில்நுட்ப வளர்ச்சிக்காக அதிகக் கவனம் செலுத்த வேண்டுமென்று முடிவு செய்திருக்கிறார்கள். அந்த அடிப்படையிலே, தொழில்நுட்ப நிறுவனங்கள் ஏராளமாக வந்துகொண்டிருக்கின்ற காரணத்தால், மாண்புமிகு உறுப்பினர் சொன்ன அந்த ஆலோசனையை மின் வாரியம் பரிசீலிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ந. சுப்ரமணியன.

திரு. ந. சுப்ரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதுக்கோட்டை மாவட்டம், குளத்தூர் தொகுதி, மாத்தூர் பகுதியில் நிறையத் தொழிற்கூடங்கள் உள்ளன. நல்லூரிலுள்ள துணை மின் நிலையம் 110 கே.வி. திறன்கொண்டது. நிறையத் தொழிற்சாலைகள் உள்ளதால், அங்கே அடிக்கடி மின் தடை ஏற்படுகிறது எனப் பொது மக்களும், அங்குள்ள தொழில் அதிபர்களும் கேட்டுக்கொண்டதற்கிணங்க, அங்கு அதிகப்படியான திறன்கொண்ட ஒரு கூடுதல் துணை மின் நிலையத்தை அரசு அமைத்துக் கொடுக்குமா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, புதுக்கோட்டையிலே அமைந்துள்ள தொழிற்பேட்டையில் மின் தடை ஏற்படுவதாகவோ அல்லது அங்கே இருக்கக்கூடிய தொழில் அதிபர்களுக்கு மின்சாரப் பற்றாக்குறை என்ற குறைபாடு வந்ததாகவோ இதுவரை அரசாங்கத்தினுடைய கவனத்திற்கு வரவில்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அது குறித்து விவரமாக எழுத்துமூலமாகத் தெரிவிப்பார்களேயானால், அதிகாரிகளோடு கலந்து பேசி, அங்கிருக்கக்கூடிய மின் திறனை அதிகப்படுத்துவதற்கு அரசு உரிய நடவடிக்கை மேற்கொள்ளும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 33, மாண்புமிகு உறுப்பினர் திருமதி ராணி வெங்கடேசன், மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.